பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 09 | வியாழக்கிழமை | 24.08.2023 | அதிர்வு 23

## பொலிஸ் நிலையத்தில் இளைஞன் தற்கொலை

### திருமலையில் பதற்றம்

திருகோணமலை ஜமாலியா பகுதியில் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் அழைத்து செல்லப்பட்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த நபர் 04

# குருந்தூர்மலைக் குழப்பங்களின் பின்னணியில் பாரதீய ஜனதாவா?

## அமெ.தூதர் யாழில் இப்படிச் சந்தேக வினா; உண்மை நிலைமை தெளிவுபடுத்தப்பட்டது

- என்.புவியரசன் -

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 24.

முல்லைத்தீவு குருந்தூர்மலைச் சர்ச்சையில் இந்தியாவின் இந்துத்துவா அமைப்பான பாரதீய ஜனதாக் கட்சியின் தாக்கம் அல்லது பின்னணி உண்டா என அமெரிக்கத்தூதுவர்நேற்றுத்தம்மையாழ்ப்பாணத்தில்சந்தித்த தமிழ்ப் பிரதிநிதிகளிடம் வினாவினார் என அறியவந்தது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜுலி சுங் நேற்று தமிழ் அரசியல்கட்சிகளின்தலைவர்கள்சிலரையும்யாழில்சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணம்-கொக்குவிலில்அமைந்துள்ளதனியார் விடுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. 03



## குருந்தூர்மலை விவகாரத்தில்

# இனவாத ரீதியான கருத்துக்களை தடுக்காவிட்டால் விபரீதம் நேரும்

## அரசுக்கு சார்ள்ஸ் நிர்மலநாதன் எச்சரிக்கை

"குருந்தூர்மலை விவகாரத்தில் இனவாத ரீதியான கருத்துக்களைக் கூறுபவர்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் நாடு மிகவும் மோசமான நிலைக்குள் தள்ளப்படும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இறக்குமதி, ஏற்றுமதி வரிகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் - 06



## சந்திரனில் விக்ரம் லேண்டர் தரையில் நகர்கிறது ரோவர்!

### நிலவில் இறங்கிய 4ஆவது நாடாக இந்தியா



நிலவில் தரையிறங்கிய இந்தியாவின் சந்திரயான் - 3 விண்கலத்தின் "விக்ரம்" லேண்டரில் இருந்து "பிரக்ஞன்" ரோவர் வெற்றிகரமாக வெளியேறியது. இது 14 நாட்கள் நிலவின் மேற்பரப்பில் ஆய்வு நடத்தவுள்ளது.

நேற்று மாலை 06

## இரகசியம்



2015 - 2019 நல்லாட்சி அரசின் காலத்தில், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய 'தோஸ்த்து' என்று கருதப்பட்டவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூணான சுமந்திரன்.

அடுத்த நாடாளுமன்றத்தில் - அதாவது தற் 04

# மயிலத்தமடுப் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட்டது என்கிறார் அமைச்சர்

## சுமந்திரனின் கேள்விக்கு அவர் சமாளிப்புப் பதில்



“மட்டக்களப்பு, மயிலத்தமடு பகுதிக்குக் காட்டு வழியாகச் சென்றவர்கள் அப்பகுதியை கமரா, செல்போன்கள் மூலம் படம் பிடித்துள்ளார்கள். இவ்வாறான நிலையில்தான் அப்பகுதியிலுள்ள ஒரு தரப்பினர் அவர்களைத் தடுத்து வைத்துள்ளார்கள். எனினும், அந்தப் பிரச்சினை மிகவும் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டதாகவே நான் அறிந்து கொண்டேன்.”

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றும்போது, “மட்டக்களப்பு, மயிலத்தமடு – மாதவனைப் பகுதி பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிவதற்காக அவ்விடத்துக்குச் சென்ற சர்வமதத் தலைவர்கள் அடங்கிய குழுவினரை அங்குள்ள ஒரு தரப்பினர் சுமார் ஆறு மணித்தியாலங்கள் தடுத்து வைத்துள்ளார்கள். இந்து மத குரு மீது தாக்குதல் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், 4 மணி நேரமாகப் பொலிஸார் அவ்விடத்துக்குச் செல்லவில்லை. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. ஏதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?” என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரைப் பகுதிக்கு ஒரு தரப்பினர் காட்டு வழியாக அனுமதியற்ற வகையில் சென்றுள்ளார்கள். அவர்கள் அப்பகுதியைக் கமரா மற்றும் செல்போன்கள் ஊடாகப் படம் பிடித்துள்ளார்கள். இவ்வாறான நிலையில்தான் அப்பகுதியிலுள்ள ஒரு தரப்பினர் இவர்களைத் தடுத்து வைத்துள்ளார்கள். சர்வமதத் தலைவர்கள் அடங்கிய குழுவினர் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து பொலிஸ் நிலையத்துக்கு 14 கிலோமீற்றர் தூர இடைவெளியுள்ளது. இதனால்தான் பொலிஸார் அங்கு செல்லக் காலதாமதமானது. எனினும், இந்தச் சம்பவத்தை அறிந்தவுடன் பொலிஸார் அவ்விடத்துக்குச் சென்று, நிலைமையை சுமுகநிலைக்குக் கொண்டு வந்ததாக நான் அறிந்து கொண்டேன். அங்கு பெரிய பிரச்சினை ஒன்றும் இல்லை என வணபிதா ஒருவரும் பிக்கு ஒருவரும் கூறினார்கள். இந்தச் சம்பவம் குறித்து நான் அறிக்கை பெற்றுள்ளேன்.” – என்றார்.

# இந்நாட்டின் சுகாதாரத்துறையை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

## நாடாளுமன்றத்தில் சஜித் ஆதங்கம்

“மனித வளங்களை முறையாக நிர்வகிக்காத காரணத்தால் சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலைந்து போகும் அபாயம் உள்ளது. ஏற்கனவே பணிபுரியும் மருத்துவர்கள் முன்னறிவிப்பின்றி நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். வெளிநாட்டில் படிக்கும் விசேட மருத்துவர்கள் நாடு திரும்புபவர்களாக இல்லை. விசேட வைத்தியர்கள் உட்பட வைத்தியர்களின் பற்றாக்குறை நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதற்கு விரைவான தீர்வை வழங்கத் தவறினால் தரமான சுகாதார சேவையை வழங்குவதில் அரசு தோல்வியடையும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சுகாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

”மனித வளங்களை முறையாக நிர்வகிக்காததால் சுகாதார அமைப்பு சீர்குலைந்து போகும் அபாயம் உள்ளது. ஏற்கனவே பணிபுரியும் மருத்துவர்கள் முன்னறிவிப்பின்றி சேவையில் இருந்து விலகியுள்ளனர் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தற்போது வெளிநாடுகளில் பயிற்சி பெற்றுவரும் விசேட மருத்துவ நிபுணர்கள் இலங்கையின் நிரந்தர சேவையில் இணையாமல் முழுநேரமாக வெளிநாட்டில் பணிபுரிவதாலும், புதிய மருத்துவர்கள் சுகாதார அமைச்சில் இணைந்து பணியாற்ற மறுப்பதாலும், பட்டப் பின் படிப்பை கற்காத காரணத்தால் இந் நாட்டில் விசேட மருத்துவர்கள் உட்பட மொத்த மருத்துவர்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதற்கான விரைவான தீர்வுகளை வழங்க அரசு முன்வராவிட்டால், நாடளாவிய ரீதியில் தரமான சுகாதார சேவைகளை சமமாக வழங்குவதில் சிக்கல் ஏற்படும். எனவே, மருத்துவர்களின் சேவையில் திருப்தியை ஏற்படுத்தும் வகையில் அவசர வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல கேள்விகள் உள்ளன.

01. இந்த நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுவதை அரசு ஏற்றுக்கொள்கின்றதா? அப்படியானால் அவை என்ன? தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவில் பதிவு செய்யப்படாத மருந்துகள் அவசர கொள்முதலின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்றனவா? அவ்வாறு கொண்டுவருவது அத்தியாவசிய மருந்துகள் மட்டுமா? அவ்வாறு எனின், அதன் தரத்தை உறுதிப்படுத்த முடியுமா? அதற்கு யார் பொறுப்பு?

02. அரச மருந்துக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்ட மருந்துகளுக்கு வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகளில் தாமதம் ஏற்படுகின்றதா? அவ்வா



றாயின், வழங்குநர்களுக்கு அரசாங்க மருந்துக் கூட்டுத்தாபனத்தால் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு? பணத்தை விரைவாகச் செலுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அவ்வாறாயின், அது எப்போது? அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக சுகாதார அமைச்சால் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது? அது சுகாதார அமைச்சுக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த

(3ஆம் பக்கம் பார்க்க....)

**Required**
Need someone who can host Quiz in English Medium on Stage for AL students.
Please contact:-
0752604360

# இந்நாட்டின் சுகாதாரத்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி.)

வரவு – செலவுத் திட்டத்தில் எத்தனை சதவீதம்? அத்தியாவசியமற்ற மருந்துகளை இறக்குமதி செய்ய அரசு அதிக பணம் செலவழிக்கவில்லையா?

03. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டம் மற்றும் இலங்கை மருத்துவ சபை சட்டம் ஆகியவற்றை நீக்கி புதிய சட்டங்களை கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா? சுகாதாரத்துறையில் நடக்கும் முறைகேடுகள், மோசடிகளைத் தடுக்க அரசு அவசர அவசரமாக புதிய சட்டங்களைக் கொண்டு வருவதை விடுத்து, தற்போதுள்ள சட்டங்களில் தேவையான திருத்தங்களைத்தானே செய்ய வேண்டும்?

04. இந்நாட்டின் முழு அரச வைத்தியசாலை முறைமையிலும் தற்போது பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை மற்றும் பற்றாக்குறையான மருத்துவர்களின் எண்ணிக்கை குறித்த விரிவான அறிக்கையை இச்சபையில் முன்வைக்க முடியுமா? எந்தெந்த பகுதிகளில் மருத்துவர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது? கடந்த 2022 ஆம் ஆண்டும் மற்றும் இந்த ஆண்டும் இந்த குறிப்பிட்ட சில மாதங்களில் எத்தனை மருத்துவர்கள் வெளிநாடு சென்றுள்ளனர்? வெளிநாடு சென்றமையால் இந்த நாடு இழந்துள்ள விசேட மருத்துவ நிபுணர்கள் எத்தனை பேர்? அது எந்தெந்தத் துறைகளில்? சுகாதார அமைச்சுக்கு முன்னறிவிப்பு இன்றி மருத்துவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதாகச் அறிக்கையிடப்படுகின்றனவா? அவ்வாறாயின் அதன் எண்ணிக்கை? முன்னறிவிப்பு இன்றி வெளிநாடுகளுக்குச் செல்லும் வைத்தியர்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு எடுத்த நடவடிக்கைகள் என்ன? இதனால் மருத்துவமனை வளாகத்தில் ஏற்படும் இடையூறுகளை தடுக்க அரசு நடவடிக்கை எடுத்ததா? அது எப்படி? புத்திஜீவிகள் வெளியேற்றம் பற்றி பேசினோம். இன்று நேற்றல்ல. பல மாதங்களுக்கு முன்பு. ஆரம்பத்திலேயே இது குறித்து முறையான தீர்வுகளை அரசு அணுகியிருக்கலாம். இப்போது நடப்பது என்னவென்றால், நாட்டை விட்டு பெரும் எண்ணிக்கையிலானோர் வெளியேறிய பிறகு சில நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கின்றனர். அது சரி. இப்போதாவது பாதுகாக்கப்பட வேண்டும். சில மாதங்களுக்கு முன்பு ஏன் இந்த தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

05. மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்க வெளிநாடுகளில் இருந்து மருத்துவர்களை வரவழைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா? அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்ய டொலர்கள் தட்டுப்பாடு நிலவும் நாட்டில், வெளிநாடுகளில் இருந்து மருத்துவர்களை கொண்டு வருவது நடைமுறையில் சாத்தியமாகுமா என்பது அரசுக்கு தெரியாதா? அரசு செய்ய வேண்டியது நாட்டில் இருக்கும் மருத்துவர்களைத் தக்கவைத்துக்கொள்வதை ஊக்குவிக்கும் வகையிலும் புதிய மருத்துவர்களை இணைத்துக்கொள்ளும் வகையிலுமான திட்டங்களை அரசு உடனடியாகத் ஆரம்பிக்க வேண்டுமல்லவா? இந்த மருத்துவத் துறையின் கல்வித் திட்டங்களில் தெளிவான மாற்றம் வர வேண்டும். பாரம்பரிய கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு சைட்டம் போன்ற பல்கலைக்கழகங்கள் முன்னுக்கு வருவதை எதிர்க்கும் காலாவதியான முறைக்குப் பதிலாக புதிய மருத்துவர்களை உருவாக்க எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன? எனக் கேட்கின்றோம். அத்துடன், இலவசக் கல்விக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் இந்த மாற்றுத் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். இலவசக் கல்விக்குப் பாதிப்பை ஏற்படுத்தி அதை அழிப்பது அல்ல. அதனைப் பாதுகாத்துக் கொண்டு இதையும் மேற்கொள்ள வேண்டும்.

06. மருத்துவர்கள் மற்றும் இன்டர்ன்ஷிப் மருத்துவர்களுக்கு பொருத்தமான புதிய சம்பள கட்டமைப்பு/ அலவன்ஸ் வழங்க முடியாதா? நாடளாவிய ரீதியில் பணியாற்றும் வைத்தியர்களின் குடியிருப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பதில் அரசு கவனம் செலுத்தியுள்ளதா? எனவே, இது தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? தக்க வைத்துக் கொள்ளும் போது இதுவும் ஒரு பெரிய பிரச்சினை.

07. மருத்துவர்கள் மட்டுமின்றி, தாதியர்கள், மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள், மருந்தாளர்கள், மருந்து ஆய்வாளர்கள் உள்ளிட்ட பல சுகாதார தொழில் வல்லுநர்கள் இன்று சுகாதாரத் துறையில் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஆய்வு கூடங்கள், மருத்துவமனை வளாகங்களில் பல செயற்பாடுகள் முடங்கிக் கிடப்பது அரசுக்குத் தெரியாதா? இந்தத் துறைகளுக்குத் தேவையான உத்தியோகத்தர்களை விரைவாக நிரப்ப அரசு செயற்படுமா? எனவே, அது எப்போது?

08. இன்றும் அரசு மருத்துவமனை கட்டமைப்பில் சி.டி. ஸ்கான் இயந்திரங்கள், எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள், கெட்லேப் இயந்திரங்கள் என பல இயந்திரங்கள் முறையான பராமரிப்பு இல்லாததால் ஆதரவற்ற நிலையில் இருப்பது அரசுக்கு தெரியுமா? சேவை ஒப்பந்தங்களை முறையாக புதுப்பிக்க அரசு ஏன் செயற்படவில்லை? இது சுகாதார அமைச்சின் செலவை அதிகரிக்கவில்லையா?

09. இந்த நாட்டில் எத்தனை மாணவர்கள் மருத்துவ பீடங்களில் கல்வி கற்கின்றார்கள்? வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது பீடங்களின் கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்ததா? அதற்கு அரசு என்ன தீர்வுகளை வழங்குகின்றது? அமைச்சரே குறிப்பாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடமொன்று நிறுவப்பட்டாலும் பௌதீக மற்றும் மனித வளங்கள் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். இவை இல்லாமல் மருத்துவர்களை எப்படி உருவாக்க முடியும்?

அதேபோன்று மற்றொரு தீவிர பிரச்சினை உள்ளது. மெனிங்கோ கொகொல் தடுப்பூசி இன்று நாட்டில் இல்லை. 12 மாதங்களுக்கு இல்லை என்று கூறப்படுகிறது. இது ஒரு குறைபாடு. எமக்குக் கிடைத்த தகவலின்படி, அது இன்றும் தட்டுப்பாடாக உள்ளது. ஹஜ் புனித பயணத்திற்காகச் செல்பவர்களுக்கு இது ஒரு முக்கியமான விடயம் என்பது உங்களுக்குத் தெரியும். இது அவர்களுக்கு கட்டாயமாகும். இந்தக் குறைபாட்டை தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

காலி சிறைச்சாலையில் தொற்று நோய் பரவியுள்ளது. நாம் கேள்விப்பட்டபடி, தடுப்பூசி உலக சுகாதார நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதாம். ஆனால் சுகாதார அமைச்சு அதை எடுக்க முயற்சிக்கவில்லையாம் என்றும் கேள்விப்பட்டோம். இதைப் பற்றி உடனடியாக பதில் சொல்ல முடியாவிட்டாலும் நாளைக்கு பதில் சொன்னாலும் பரவாயில்லை.

அதனால்தான் இன்று (நேற்று) சபாநாயகர் சபையில் இல்லாத நேரத்தில் நடந்த சம்பவத்துக்கு இரண்டு எம்.பி.க்களைச் சபைக்கு வரக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது போன்ற முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் எப்போதும் ஒரே மாதிரியான முடிவா எடுக்கப்படுகின்றது எனக் கேட்க விரும்புகின்றேன்.

துறைமுகத்தில் 13 ஏக்கர் குறைந்த விலைக்கு விற்கப்பட்டுள்ளதாக இந்த அரசின் உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார்.

கழிவு உர அறிக்கை ஒரு வருடமாக கோப் குழுவில் விவாதிக்கப்படவில்லை. அரசின் பணத்தைத் திருடியவர்கள் நன்றாகச் செய்கிறார்கள். மேலும், ஒரு மக்கள் பிரதிநிதி ஒரு அலுவலரின் பெயரைக் குறிப்பிட்டார். அதிகாரி என்ற அலுவலர் மீது அபத்தமான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அப்படிப்பட்ட நல்ல அலுவலர்களை பாதுகாக்கத்தான் நாங்கள் இருக்கிறோம். செயலாளர் நாயகத்துக்கும் மற்றும் பிற அலுவலர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு இடமளிக்க மாட்டோம்.

நாங்கள் நன்றாக அவதானத்துடன் இருக்கின்றோம். பழிவாங்கல் நடவடிக்கையை அனுமதிக்க முடியாது. மேலும் இந்த சபையில் கேள்வி கேட்டால் பயத்தில் ஓடி விடுகின்றார்கள். பதில் சொல்ல முதுகெலும்பு இல்லை. இந்த கோழைகளிடம் பதில் சொல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

காதார அமைச்சரே நான் கேட்கும் இந்தக் கேள்விகள் பற்றிய தகவல் உங்களுக்கும் உங்களுக்கு கீழ் உள்ள அதிகாரிகளுக்கும் தெரியாவிட்டால் சுகாதாரத் துறையைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். இவை எளிய தரவுகள். இந்த விடயங்கள் உங்களுக்கு தெரியாதா? இது ஒரு தேசிய துக்க நிலைமையாகும்.” – என்றார்.

# குருந்தூர்மலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ்ப்பாணம் – கொக்குவிலில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் ஆகியோருடன் அவர் கலந்துரையாடினார். இதன்போதே அமெரிக்கத் தூதுவர் மேற்படி சந்தேகத்தை வினாவியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த சி.வி.கே. சிவஞானம், “அப்படி ஒரு பின்னணியும் கிடையாது. இது அரசின் – ஆளும் தரப்பின் ஒரு வஞ்சகச் செயற்பாட்டுக்கு எதிராக இயல்பாகக் கிளர்ந்த தமிழ் மக்களின் மன எண்ணம்” – என்று தெளிவுபடுத்தினார்.

இதேநேரம் குருந்தூர்மலை விடயத்தையொட்டி, நாடாளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி சரத் வீரசேகர நாடாளுமன்றில் ஆற்றிய உரை சுட்டிக்காட்டப்பட்டது. இதனை வெளியில் அவரால் பகிரங்கமாகக் கூற முடியுமா? வெளியில் கூறினால் ரஞ்சன் ராமநாயக்க போன்று அவரும் சிறை செல்லும் நிலை ஏற்பட்டிருக்கும் என்ற விடயமும் அமெரிக்கத் தூதுவருக்குச் சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரியவந்தது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதைய நாடாளுமன்றத்தில் – இருவருக்கும் இடையில் என்னவோ ஒத்துப் போகவில்லை. அதுவும் 'அறகலய' போராட்டம் உச்சத்தைத் தொட்ட வேளை முதல் இப்போது வரை, இருவருக்கும் இடையிலான அக்கப்போர் பெரும் போர்தான்.

கோட்டாபய ராஜபக்ஷவின் அதிகாரக் கோட்டை சரியத் தொடங்கிய சமயத்தில், பிரதமராக அவருக்கு ரணில் முதுகு – முண்டு – கொடுக்கத் தொடங்கிய காலகட்டத்திலேயே ரணில் – சுமந்திரன் அக்கப் போர் சூடாகி விட்டது.

இப்போது கடைசியாக, உள்நாட்டுக் கடன் மறு சீரமைப்பு திட்டம் தொடர்பான சர்ச்சையில் இருவருக்கும் இடையிலான இழுபறி உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது.

'உள்நாட்டுக் கடன்கள் மறுசீரமைப்புத் தொடர்பாக முடிவு செய்ய வேண்டும். அது பற்றிப் பேசுவதற்காக ஒரு சர்வ கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தைக் கூட்டுங்கள்.' – என்று உரிமையோடு சுமந்திரனைப் பணித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

'ஆம்' என்று தலையாட்டி, கூட்டத்துக்குத் தாமே அழைப்பு அனுப்பிக் கூட்டினார் சுமா. அங்குதான் முழு முரண்பாடுக்கும் பிள்ளையார் சுழி போடப்பட்டது.

சுமந்திரன் கூட்டிய கூட்டம் என்பதால் அவரே அதற்குத் தலைமை வகித்தார். எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளும் வந்திருந்தனர். ரணில் விக்கிரமசிங்க பார்வையாளர் போல வந்து கலந்து கொண்டார்.

அங்குதான் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான அரசின் திட்டத்தை கட்டவிழ்த்தார் மத்திய வங்கி ஆளுநர். அதை கேட்டதும் சீறினார் சுமந்திரன்.

"பிணைமுறி என்ற பெயரில் 31 வீத வட்டிக்கும் தனியா ர் முதலாளிகளிடம் – பண முதலைகளிடம் – வாங்கிய கடன் ஒன்றிலும் நீங்கள் கை வைக்கவில்லை. அப்படியே உரிய காலத்தில், உரிய வட்டியுடன் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப் போகிறீர்கள். மாறாக, மாதச் சம்பளம் பெறும் அப்பாவி ஊழியர்கள் தங்கள் உழைப்பின் இறுதிச் சேமிப்புக் காகச் சேர்த்த ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து அரசு பெற்ற கடனை மீளச் செலுத்துவதில் ஆப்படித்திருக்கின்றீர்கள். அதற்கான வட்டியில், மீள் செலுத்துகையில் கை வைத்திருக்கிறீர்கள். இந்த ஓர வஞ்சனை நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதது. நீதியற்றது. இதற்கு நாம் இணங்க மாட்டோம்" – என்று வாதிட்டார் சுமா.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'வெளிநாட்டுத் தூதுவர் ஒருவருக்கு நான் இரவு விருந்து அளிக்கிறேன். அதற்கு நேரமாகிவிட்டது. போய் வருகிறேன்' – என்று கூறிக்கொண்டு , மெல்ல ஜாகா வாங்கினார்.

சுமந்திரனின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் ரணில் அரசு அந்தத் திட்டத்தை செயல்படுத்த முனைந்தது.

சுமந்திரன் உயர்நீதிமன்றுக்குப் போனார்.

'ஊழியர் சேமலாப நிதியத்தின் பாதுகாவலர் நாட்டின் நாணய நிதியத்தின் தலைவரான மத்திய வங்கி ஆளுநர் தான். தான் பாதுகாவலனாக இருக்க வேண்டிய ஊழியர் சேமலாப நிதியத்தில் அப்பாவி தொழிலாளர்களின் சேமிப்புக்கு அவரே பதில் கூற வேண்டியவர். பொறுப்பான அவரே அந்த ஊழியர்களின் சேமிப்புக்கு ஆப்படிக்கும் விதத்தில் கடன் மறுசீரமைப்புத் திட்டத்திற்கு இணங்கி, தமது பொறுப்பையும் கடமையையும் அவர் செய்யத் தவறக் கூடாது' – என்று அழுத்தமாக வாதாடினார் சுமந்திரன்.

நான் என்ன செய்ய என்று விழி பிதுங்கிய மத்திய வங்கி ஆளுநர், தாம் தப்புவதற்கு ஒரு சத்தியக்கடதாசியை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

"கடன் மறுசீரமைப்புக்கு ஊழியர் சேமலாப நிதியம் தானாக இணங்கி சம்மதம் தெரிவிக்காவிட்டால், ஊழியர் சேமலாப நிதியத்தில் சேரும் முதலீட்டுக்கான வட்டிக்குரிய வரியை 14 வீதத்தில் இருந்து முப்பது வீதமாக அதிகரிக்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது. அப்படி வரியைக் கூட்டினால் ஊழியர் சேமலாப நிதிய அங்கத்தவர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே அப்படி ஒரு வட்டி வீத அதிகரிப்புக்கான சட்டம் வருமானால் வேறு வழியின்றி இப்போதைய உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு திட்டத்தில் ஊழியர் சோமலாப நிதியத்தில் இருந்து அரசுக்கு வழங்கிய கடனில் பல பிடித்தங்களுக்கு இணங்குவேன். அதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. அச்சட்டம் வராத வரை இத்தகைய ஏற்பாட்டுக்கு நான் இணங்க மாட்டேன்" என்று அந்தச் சத்தியக்கடதாசியில் உறுதி தெரிவித்து இருந்தார் மத்திய வங்கி ஆளுநர்.

இதற்கிடையில் –

'உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் போன்ற பொருளாதார நிதி விடயங்கள் தொடர்பில் கொள்கை ரீதியான நடவடிக்கைகள், முடிவுகளை எடுக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உண்டு. வேறு தரப்புகளுக்கு இல்லை. வேறு தரப்புகள் தலையிட்டு முடிவு செய்தாலும், அந்த முடிவை நான் ஏற்க மாட்டேன்' – என்று நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் அறிவித்து உயர் நீதிமன்றத்திற்கு ஓர் அச்சுறுத்தலை விடுத்தார்.

நாடாளுமன்ற விடயத்தில் உயர் நீதிமன்றம் உத்தரவிட முடியாது என்று தம்பாட்டுக்கு சபாநாயகரும் உயர் நீதிமன்றுக்கு ஓர் அச்சுறுத்தல் கயிற்றை விட்டார்.

அதனாலேயே என்னவோ, சுமந்திரன் தரப்பின் மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்க மறுத்து மெல்ல ஜாகா வாங்கியது.

அத்தோடு பிரச்சினை ரணிலுக்கும் அரசுக்கும் சார்பாக முடிந்துவிட்டது என்றுதான் பலரும் எண்ணினர்.

ஆனால் விடயம் அப்படி அல்ல.

ஊழியர் சோமலாப நிதியம் மேற்படி கடன் மறுசீரமைப்புத் தொடர்பான தனது திட்டத்துக்கு இணங்காவிட்டால் அதன் வட்டி ஈட்டல் மீதான வரியை 14 வீதத்திலிருந்து 30 வீதமாக்குவேன் என்ற அரசுத் தரப்பு அறிவிப்புப்படி உரிய சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால்தான் மறுசீரமைப்புக்கு இணங்குவேன் என்று உயர்நீதிமன்றுக்கு மத்திய வங்கி ஆளுநர் சத்தியக் கடதாசி மூலம் உறுதி கொடுத்திருப்பதால் அதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது.

அதை ஆட்சேபிப்பதற்கான இரண்டு வார காலக்கெடு முடிவடையும் நாள் வரைக் காத்திருந்து, காலத்தை இழுத்து, கடைசி நாளில் அந்தச் சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தில் சட்டச் சவாலுக்கு உட்படுத்தும் வழக்கை இரண்டு தினங்களுக்கு முன்னர் தாக்கல் செய்திருக்கிறார் சுமந்திரன்.

இந்த வழக்கு இன்னும் ஒரு மாதத்துக் காவது இழுபடும். அதுவரை ரணிலின் உள்நாட்டுக் கடன் மறு சீரமைப்பு நடவடிக்கை அந்தரத்தில் தொங்கும்.

அந்தச் சட்டமூலத்தில் பல அடிப்படை பிழைகள், சட்டக் கோட்பாட்டுத் தவறுகள் தாராளமாக இருக்கின்றன என்கின்றன சட்ட வட்டாரங்கள்.

அதனால் அந்தச் சட்டமூலம் தவறு என்றோ, அதை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன்தான் நிறைவேற்ற வேண்டும் என்றோ அல்லது அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெற வேண்டும் என்றோ உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கக்கூடிய சாத்திய கூறுகள் தாராளமாக உண்டு.

உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைக்கும் ரணிலின் திட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்குத் தாமதிக்க வைத்திருக்கும் சுமந்திரன், உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் நிரந்தரமாக அந்த முயற்சிக்கு ஆப்படித்தி விடவும் தாராள வாய்ப்புகள் உண்டு.

ரணிலும் சுமந்திரனும் இப்போதைக்கு 'விடாக்கண்டன் – கொடாக் கண்டன்' ஜோடிதான் போலும்...!

## பொலிஸ் நிலையத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

ஒருவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நேற்று மாலை 4.50 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜமாலியா பகுதியில் சில வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் திருகோணமலை – ஜமாலியா, தக்வா நகரைச் சேர்ந்த சுபைர் முகம்மது ஜுனைட் (வயது26) எனவும் தெரிய வருகின்றது.

ஜமாலியா – கடற்கரைப் பகுதியில் 21ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் பணத்தை திருடினார் என இந்நபருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அந்த இளைஞன் சந்தேகத்தின்பேரில் 22 ஆம் திகதி மாலை திருகோணமலை தலைமையகப் பொலிஸாரினால் அழைத்துச் செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இளைஞன் நேற்று மாலை தலைமையகப் பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் இருக்கின்ற மலசல கூடத்திற்குள் தான் அணிந்திருந்த ஆடையைக் கிழித்து கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

எனினும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் எது வித முறைப்பாடுகளும் பொலிஸ் புத்தகத்தில் எழுதப்படாத நிலையில், நேற்று மாலை வரை தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரிய வருகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்த இளைஞன் பொலிஸ் நிலையத்தில் உயிரிழந்தமையைக் கேள்வியுற்ற அவரது உறவினர்கள் அந்த இளைஞனுக்கு எதிரான முறைப்பாட்டை மேற்கொண்டவர் எனக் கருதப்படும் இளைஞனைத் தாக்கியுள்ளனர் எனவும் தெரிய வருகின்றது.

ஜமாலியா – லவ்லேன் பகுதியில் வசித்து வரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அலி சப்ரி முஹம்மட் ரிஸ்வான் (40வயது) மற்றும் அலி சப்ரி கடாபி (44வயது) ஆகியோர் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இளைஞனின் மரணத்திற்கு நீதிகோரியும் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மக்கள் டயர்களை எரித்து வீதி மறியல் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

# சண்டிலிப்பாயில் அடாவடி; 2 சூத்திரதாரிகள் சிக்கினர்





(என்.புவியரசன்)
யாழ்ப்பாணம், ஒக.24

சண்டிலிப்பாயில் வீடொன்றுக்குள் புகுந்து மோட்டார் சைக்கிள்களைத் தீயிட்டுக் கொளுத்திய வன்முறைச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு குழுவினரால் நேற்றைய தினம் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

23,24 வயதையுடைய – மானிப்பாயைச் சேர்ந்த – சந்தேகநபர்களை கைதுசெய்தமையுடன் அந்த வன்முறைச் சம்பவத்துக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் ஒரு மோட்டார் சைக்கிள், இரண்டு வாள்கள், இரும்புக் கம்பி ஒன்று என்பனவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஏற்கனவே இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் பழிவாங்கும் நோக்கிலேயே இந்த வன்முறைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

அத்துடன் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட மேலும் 6 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் அவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளில் குற்றத் தடுப்புப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

# மலையகத்தில் தாயைத் தொடர்ந்து குழந்தையும் நேற்று சடலமாக மீட்பு!

## குளத்துக்கு அருகில் கடிதமும் கண்டுபிடிப்பு

லிந்துலை – லோகி தோட்டத்திலுள்ள குளத்தில் குதித்து உயிரை மாய்த்துக் கொண்ட பெண் நேற்று முற்பகல் சடலமாக மீட்கப்பட்ட நிலையில், அவரது ஒன்றரை வயது குழந்தையும் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

லோகி தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதுடைய மகாமணி தயானி என்பவரே இவ்வாறு குளத்தில் குதித்து உயிரை மாய்த்துள்ளார்.

மேலும், திருமண பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை மற்றும் ஐந்து பக்கங்களைக் கொண்ட கடிதம் ஆகியனவும் குளத்துக்கு அருகிலிருந்து மீட்கப்பட்டுள்ளன என்று லிந்துலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தன்னையும், தனது குழந்தையையும் கணவரும், அவரின் உறவினர்களும் துன்புறுத்தினர் என அந்தக் கடிதத்தில் அந்தப் பெண் எழுதியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்டுள்ள தாய் மற்றும் குழந்தையின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.



இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும்

## ஆணைக்குழுவிடம் மொட்டு வலியுறுத்து



உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியின உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தலைவர்கள் 30 பேர் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இது தொடர்பில் பேச்சு நடத்தினர்.

தேர்தல் நடத்தப்படாமையால் வேட்பாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து இதன்போது எடுத்துரைக்கப்பட்டது.

இதில் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசமும் கலந்துகொண்டார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாத பட்சத்தில், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ள சுற்றறிக்கையை இரத்துச் செய்யுமாறு அரசு மற்றும் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் கோருவதற்கும் பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று இந்த வாரம் பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இது தொடர்பில் கலந்துரையாடுவதற்குத் தயாராக இருக்கின்றது எனவும் அறிய முடிகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்புமனுவைச் சமர்ப்பித்த அனைத்து வேட்பாளர்களுக்கும் வழமையான சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது எனவும், அதனால் அந்தப் பிரதேசங்களில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் அதே பல்லவி

இலங்கைத் தமிழர் விவகாரத்தை ஒட்டித் தனது நிலைப் பாட்டை மீண்டும் ஒரு தடவை உயர் மட்டத்தில் நேற்று வெளியிட்டிருக்கின்றது இந்தியா.

இந்தத் தடவை இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கையில் சட்டத்தை உருவாக்கும் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை - இந்திய நாடாளுமன்ற நட்புறவு குழுவின் கூட்டம் நேற்று நாடாளுமன்றக் குழு அறை ஒன்றில்நடைபெற்றது. இதில் கொழும்புக்கான இந்தியத் தூதர் கோபால் பாக்லேயும் கலந்து கொண்டார்.

இலங்கையின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 40 எம்.பிக்கள் இதில் பங்குபற்றினர். அமைச்சர்கள் மற்றும் அரச - எதிரணி உறுப்பினர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் தமது விசேட உரை ஒன்றை இணையம் மூலம் காணொலி வாயிலாக வழங்கினார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீளுவதற்கு தன்னாலான உதவிகளை இந்தியா விரைந்து வழங்கியமையையும், மிக நெருக்கமான அயல்நாடான இலங்கையுடன் நல்லுறவை இந்தியா எப்போதும் பேணுகின்றமையையும் இந்திய வெளியுறவு அமைச்சர் இதன்போது எடுத்துரைத்தார்.

அச்சமயம்தான் இலங்கைத் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவின் மாறாத நிலைப் பாட்டை மீண்டும் ஒரு தடவை இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தினார்.

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு அவர்களின் சுய கௌரவம், சமத்துவம் மற்றும் நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடிய நீதியான அதிகாரப் பகிர்வு முறைமை எட்டப்பட வேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தி, மாகாண சபைத் தேர்தல்களை மேலும் காலம் தாமதிக்காமல் நடத்தி, அதில் இருந்து நிலைத்த தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்ற சாரப்பட இந்திய வெளியுறவு அமைச்சரின் உரை அமைந்தது.

காத்திரமான விடயம் அந்த உரையில் இடம்பெற்று இருந்தாலும், அண்மையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லி சென்றிருந்தபோது இந்திய பிரதமர் மோடியுடன் அவர் நடத்திய சந்திப்பின் பின்னர், இந்தியா வெளியிட்ட அறிக்கை வரை, கடந்த பல ஆண்டுகளாக இந்தியத் தரப்பின் உத்தியோக பூர்வ நிலைப்பாடாக இதே விடயம் வலியுறுத்தப் பட்டு வருகின்றது என்பது மறுக்கக் கூடியது அல்ல.

அதன் இன்னொரு தொடராக மீண்டும் ஒரு தடவை இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்றும் வலியுறுத்திக் கூறி இருக்கின்றார். அவ்வளவே.

இப்படி அறிக்கைகளிலும், உரைகளிலும், செய்தியாளர் சந்திப்புகளிலும் ஒரே பல்லவியை - கீறல் விழுந்த ரெக்கார்ட் மாதிரி - மீண்டும் மீண்டும் பாடுவதைத் தவிர, அதில் கூறப்பட்டுள்ள விடயங்களை செயலுருப் பெறச் செய்வதற்கு இந்தியா காத்திரமான - அழுத்தமான - ஆக்கபூர்வமான - எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவே இல்லை என்பதுதான் தமிழர் தரப்பின் வேதனையாகும்.

## இனவாத ரீதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"குருந்தூர்மலை தொடர்பில் இனவாதக் கருத்துக்கள் மூலம் தமது அரசியலை தக்க வைத்துக்கொள்வதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர். இது தொடர்பில் சரத் வீரசேகர மோசமான கருத்தை வெளியிட்டுள்ளார். நானும் சிறிதரன் எம்.பியும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அங்கு சென்றிருந்தபோது அங்கு ஆதிசிவன் ஆலயம் மாத்திரமே இருந்தது. குருந்தூர்மலைக்கு வெளியில் உள்ள விவசாயக் காணிகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஆராயவே நாங்கள் அங்கு சென்றிருந்தோம். அப்போது அங்கே எந்தவிதமான விகாரையும் இருக்கவில்லை. பின்னர் தொல்பொருள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆய்வு செய்ய நடவடிக்கை எடுத்தார். அப்போது இந்து ஆலயத்துக்குப் பாதிப்பு ஏற்படாது என்று கூறினார். இந்நிலையில் அங்கு புதிய நிர்மாணங்களுக்கு நடவடிக்கை எடுத்தபோது நீதிமன்றம் அதற்குத் தடை விதித்திருந்தது.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் சரத் வீரசேகர நீதிமன்றத் தீர்ப்பையும், நீதிவானின் தனிப்பட்ட விடயங்களையும் மிகவும் கேவலமாகப் பதிவு செய்துள்ளார். நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி வெளிநாட்டுக் கடனுக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் தமது அரசியலைத் தக்கவைத்துக்கொள்ள இனவாதத்தை மூலதனமாகப் பயன்படுத்துகின்றனர்.

தொல்பொருள்களை அழிப்பதற்கோ, தொல்பொருள் அடையாளங்களை அழிப்பதற்கோ விடுதலைப்புலிகள் தயாராக இருக்கவில்லை. அங்குள்ள மக்களும் அதனைச் செய்யவில்லை. மன்னாரில் விகாரையொன்றுக்காக 2004ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளும் காணிகளை வழங்கியுள்ளனர். இதனை அந்த விகாரையுடன் தொடர்புடைய பிக்குவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் சரத் வீரசேகர போன்றோர் பொய்யான கருத்துக்களை கூறுகின்றனர். நீதிமன்றத் தீர்ப்பையும். நீதிவானின் தனிப்பட்ட விடயங்களையும் சபையில் கூறுவது தொடர்பில் ஆட்சியாளர்களே வெட்கப்பட வேண்டும். இவ்வாறு நீதிவான் தொடர்பில் தனிப்பட்ட விடயங்களை கூறுவது கண்டிக்கத்தக்கதே.

எங்கும் பௌத்த விகாரைகளையும் இல்லாமல் செய்வதற்குத் தமிழர்கள் எந்தவகையிலும் முயற்சிக்கவில்லை என்பதனை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் 2019 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமிழர்களின் பூர்வீக இடங்களை இல்லாது செய்து அதில் புதிதாக பௌத்த விகாரைகளை அமைக்கும் முயற்சிகளையே மக்கள் எதிர்க்கின்றனர்.

குருந்தூர்மலை தொடர்பாக இனவாத ரீதியான கருத்துக்கள் உள்ளன. இது தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இனவாதக் கருத்துக்களைக் கூறுபவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த விடயத்தை ஆட்சியாளர்கள் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். சிலரின் கருத்துக்கள் வன்முறைகளைத் தூண்டும் வகையில் உள்ளன. உண்மையை வெளிப்படையாகப் பேசுங்கள். இனவாதக் கருத்துக்களை நிறுத்தாவிட்டால் நாடு மிகவும் மோசமான நிலைக்கே செல்லும்." - என்றார்.

## சந்திரனில் விக்ரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

6.04 மணியளவில் நிலவின் மேற்பரப்பில் விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக தரையிறங்கியது. நிலவு ஆய்வில் இந்தியா வரலாறு படைத்த தருணமாக அது மாறியது. அத்துடன் நிலவில் லேண்டரைத் தரையிறக்கிய நாடுகளில் அமெரிக்கா, சோவியத் ரஷியா மற்றும் சீனாவுக்கு அடுத்ததாக நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது.

(முன்னர் வந்த விவரமான செய்தி 17ஆம் பக்கத்தில்)

# நல்லூரானின் மூன்றாம் நாள் உற்சவம்















Singhams Media
அலை ஓசை

துல்லியமான ஒலிநயத்துடன் உங்கள் நிறுவனங்களின் பெயர்களை ஒலிபரப்பு செய்து கொள்ள நாடுங்கள்.
திருநெல்வேலி பகுதியில்.

ஆடியபாதம் வீதி, திருநல்வேலி, யாழ்ப்பாணம்.

தொ.பே : 076 610 5467, 077 124 2732

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஒன்றிணைத்து மன்னாரில் 30இல் போராட்டம்

## அனைத்து தரப்பினரையும் பூரண ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை

(மன்னார் நிருபர்)

மன்னார்,ஓக.24

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஒன்றிணைத்து எதிர்வரும் 30 ஆம் திகதி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் நேற்றுப் புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை மன்னாரில் மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளோம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மன்னாரில் முன்னெடுக்க உள்ளோம்.

இந்த ஆர்ப்பாட்டம் மன்னார் "சதொச" மனித புதைகுழியிலிருந்து ஆரம்பித்து பவனியாக மன்னார் நகர சபை



பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடையும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி 14 வருடங்களாக நீதிக்காக போராடும் தாய்மார்களின் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ் தேசியத்தில் பணிபுரியும் – தமிழ் தேசியத்தை நேசிக்கும் – அனைவரும் எங்களுடன் கைகோர்க்க வேண்டும். ஐந்து வயது முதல் 70 வயது வரை உள்ளவர்கள் அனைத்து தரப்பினரும் எங்கள் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், காணாமல் போன உறவுகளின் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் எமது பிள்ளைகளுக்கு மரணச் சான்றிதழ், நஷ்ட ஈடு வழங்க அரசாங்கம் முயல்கிறது.

ஆனால் எமக்கு நீதி வேண்டும். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கேட்கின்றோம்.

அதனால் தான் இதுவரை இலங்கை அரசை நம்பவில்லை. இனியும் நம்பப் போவதில்லை.

இவ்வாறானதொரு சம்பவம் இலங்கையில் நடை பெறவில்லை என்பதை உலகுக்குக் காட்டவே இந்த அரசாங்கம் உலகத் தரப்பினரின் மனதைக் கவரும் வகையில் சலுகைகளை கொடுக்கிறது.

அதேபோன்று ஓ.எம்.பி. மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்களை கொண்டு வந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மார்களின் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்ய நினைக்கிறது.

எது, எப்படி இருந்தாலும் எங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

எனவே பல்கலைக்கழக மாணவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என அனைவரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு எமது உறவுகளுக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும். – என்று மனுவல் உதயச்சந்திரா மேலும் தெரிவித்தார்

# முதியோர்கள், நோயாளர்களுக்கான ஜூலை மாதக் கொடுப்பனவு நாளை

## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தகவல்



முதியோர், ஊனமுற்ற மற்றும் நீரிழிவு நோயாளர்களுக்கான ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக 2 ஆயிரத்து 684 மில்லியன் ரூபா நிதி, திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, முதியோருக்கான கொடுப்பனவுகளை தபால் அலுவலகங்களின் ஊடாகவும் ஊனமுற்ற மற்றும் நீரிழிவு நோயாளர்களுக்கான கொடுப்பனவுகளை பிரதேச செயலகங்களின் ஊடாகவும் நாளை ( 25 ஆம் திகதி) முதல் பெற்றுக் கொள்ள முடியும் என இராஜாங்க அமைச்சர் தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தனியார் மின்னுற்பத்தி நிலையத்திடம் 23 மெகாவாட் மின்சாரம் கொள்வனவு

மின்சார நெருக்கடியை தீர்க்கும் வகையில் மாத்தறை "ஏஸ் பவர்" தனியார் மின்னுற்பத்தி நிலையத்திடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் 23 மெகாவாட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

தென் மாகாணத்திற்கு தொடர்ச்சியாக மின்சாரத்தை விநியோகிக்கும் நோக்கில் மாத்தறை ஏஸ் பவர் தனியார் நிறுவனத்திடமிருந்து அவசர கொடுக்கல் வாங்கலின் அடிப்படையில் மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக எம்பிலிபிட்டிய ஏஸ் பவர் தனியார் நிறுவனத்திடமிருந்தும் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மின்சார சபை கூறியுள்ளது.



Pearl Island Inn
Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

உங்கள்
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

தொடர்புகளுக்கு
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com




G20
भारत 2023 INDIA
सत्यमेव जयते
75 Azadi Ka Amrit Mahotsav
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
"ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்"
சிறப்புப் பட்டிமன்றம்
நவீன தொழில்நுட்பங்களின் வரவு...
வரமே! வரமல்ல!
திருமதி பாரதி பாஸ்கர்
பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன்
திரு. ச. லலிசன்
திரு. ந. விஜயசுந்தரம்
திரு.எஸ்.ராஜா
(நடுவர்)
திரு. நடராஜன்
செல்வி இ.ஹார்த்தியாயினி
திரு. ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ
திரு. ஜ. யோகநாதன்
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 25 ஆகஸ்ட், 2023
நேரம் : மாலை 6.00 மணிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்

# முல்லையில் நெல் கொள்வனவு செய்ய அரசு தயார்; விவசாயிகள் பின்னடிப்பு!

- விஜயரத்தினம் சரவணன் -

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நெற்கொள்வனவுக்கென ஐந்து கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, நெல் சந்தைப் படுத்தல் சபையால் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முல்லைத் தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். பரணீகரன் தெரிவித்துள்ளார்.

எனினும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற கருத்து நிலவுவதால் விவசாயிகள் நெல்லைச் சந்தைப் படுத்துவதில் ஆர்வமின்றிக் காணப் படுகின்றனர் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையால் மேற் கொள்ளப்படும் நெற்கொள்வனவு தொடர்பில் ஊடகவியலாளர் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

விவசாயிகளால் நெல்லைக் கொள் வனவுசெய்யுமாறு பாரிய அழுத்தம் வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய அமைச்சினூடாகவும், அரசியல் பிரதிநிதிகளூடாகவும், நிர்வாக ரீதியாகவும் நெல் கொள்வனவை மேற்கொள்ளுமாறு முல்லைத் தீவு கமநல அபிவிருத்தித் திணைக்களம் வலியுறுத்தியிருந்தது.

அந்தவகையில் நெல் சந்தைப் படுத்தல்சபை முதற்கட்டமாக ஐந்து கோடி ரூபாவை நெல் கொள்வனவிற்காக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒதுக்கியிருந்தது.



இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் 12 மெற்றிக்தொன் நெல் கையிருப்பில் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் நெல் கொள்வனவைத் துரிதப்படுத்துமாறு முல்லைத் தீவு கமநல அபிவிருத்தி திணைக்களமும் வலியுறுத்தியிருந்தது.

அதற்கமைய வெள்ளை நாடு நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் முதற்கட்ட அனுமதி வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை வெள்ளைநாடு நெல்லின் அளவு மிகக் குறைவாகக் காணப்படுவதுடன், சிகப்பு நாடு (கோறா) நெல் வகையே அதிகமாகக் காணப்படுகின்றது.

கோறா நெல்லினைக் கொள்வனவு செய்வதற்குரிய அனுமதி இதுவரை கிடைக்கவில்லை. இருப்பினும் முதற்கட்டமாக குமுழமுனையில் களஞ்சியசாலை வழங்கப்பட்டு நெல் சந்தைப் படுத்தல்சபை நெல்கொள்வனவை ஆரம்பித்துள்ளது.

அதேபோல் புதுக்குடியிருப்பிலும் களஞ்சியசாலை ஒன்று தெரிவு செய்யப்பட்டு நெல்சந்தைப்படுத்தல் சபையிடம் அது ஒப்படைக்கப்பட்டுள்ளது. அங்கும் நெல் கொள்வனவு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் தற்போது உலகளாவிய ரீதியிலும், நாடளாவியரீதியிலும் அரிசித் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற கருத்து நிலவுவதால், தற்போது விவசாயிகள் நெல்லைச் சந்தைப்படுத்துவதில் ஆர்வமின்றிக் காணப்படுகின்றனர்.

மேலும் ஒரு கிலோ கீரிச்சம்பா நெல் 105ரூபா, சம்பா 100ரூபா, நாடு 95ரூபா என்ற விலை நிர்ணய அடிப்படையில் நெல்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது – என்றார்.






# காலி சிறையில் நோய் பரப்பிய பக்றீரியா கட்டுப்பாட்டுக்குள்!

காலி சிறைச்சாலையில் பரவி வந்த மெனிங்கோகோகஸ் பக்றீரியா நோய் தொற்று முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வழக்கு விசாரணைகளுக்காக கைதிகளை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்வது மற்றும் சிறைச்சாலைக்குள் புதிய கைதிகளை அனுமதிப்பதை தற்காலிகமாக இடைநிறுத்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரணசிங்க தெரிவித்துள்ளார்.


காலி சிறைச்சாலையில் அண்மையில் பரவிய பக்றீரியா தொற்று காரணமாக கைதிகள் இருவர் உயிரிழந்தமையுடன் தொற்றுக்குள்ளான 16 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

கைதிகளின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு விசேட வைத்தியர்கள் குழுவொன்று அனுப்பப்பட்டு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், இந்த குழுவின் அறிக்கைகளுக்கு அமைவாக கைதிகளிடையே மெனிங்கோகோகஸ் பக்றீரியாவால் ஏற்பட்ட நோய் தொற்று நிலைமை என உறுதி செய்யப்பட்டது.

காய்ச்சல், தலைவலி, கழுத்து வலி, குமட்டல், வாந்தி, சூரிய ஒளி உடலில் படுவதால் சிக்கல், உடலில் கடினத் தன்மை என்பன நோய்த் தொற்று அறிகுறிகளாகும்.

இந்நிலையில், தொற்றுக்குள்ளான 9 பேர் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் இருவர் குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர்.மேலும் 7 பேர் சிறைச்சாலையின்



வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனச் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சிறைச்சாலை பரவிய பக்றீரியா பரவல் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது –

இந்த பக்றீரியா மனித மூளையின் செயல்திறனைக் கடுமையாகப் பாதிக்கிறது. இதன் காரணமாக விரைவாக மரணம் சம்பவிக்கலாம். இது இலங்கையில் அரிதான நோயாகும். குறிப்பாக வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு வருகை தந்த ஒருவரிடமிருந்து இந்த பக்றீரியா பரவியிருக்கலாம். எவ்வாறு சிறைச்சாலையில் தொற்று ஏற்பட்டது என்பது தொடர்பில் கண்டறியப்படவில்லை.

காலி சிறைச்சாலையில் சுமார் ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள். நோயெதிர்ப்பு குறைபாடு உள்ள தரப்பினர் மீது இந்த நோய் இலகுவில் பரவ வாய்ப்புகள் உள்ளன. குறித்த பற்றீரியா இதற்கு முன்னரும் புதிய மகசீன் சிறைச்சாலை, மஹர சிறைச்சாலைகளில் பரவியது. நாம் அதனைக் கட்டுப்படுத்தினோம்.

எனவே, பக்றீரியா தொடர்பில் வீணான அச்சம் கொள்ள தேவையில்லை. பக்றீரியா பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. முடியுமான அளவு சுகாதார வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். முகக்கவசம் அணிவது, கையுறை அணிவது, தொற்றுக்குள்ளானவர்கள் தனிமைப்படுத்துவது என்பன பின்பற்ற வேண்டும். கைதிகளை பார்வையிட வருகை தருவோர் போது சுகாதார ஆலோசனைகள் பின்பற்ற வேண்டும் என்றார்.

இதனிடையே, சிறைச்சாலையில் இருந்து வெளியேறிய கைதிகள் மற்றும் அவர்களைப் பார்வையிடுவதற்காக வந்த உறவினர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதா என்பதை பரிசோதிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

காலி சிறைச்சாலையிலிருந்து கைதிகளை வெளியே கொண்டுசெல்லும் நடவடிக்கைகள் இரு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கைதிகளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையும் இரு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த காலப்பகுதியில் கைதிகளை பார்வையிடவும் தற்காலிகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இன்சுலின் மருந்து இறக்குமதி

நாட்டில் தட்டுப்பாட்டு நிலவிய இன்சுலின் மருந்து 2 லட்சத்து 75 ஆயிரம் பொதிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட இன்சுலின் மருந்துப் பொதிகளை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அமைச்சின் மேலதிக செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மருந்து விநியோகத்துறையில் தட்டுப்பாடு நிலவும் மருந்துகளின் எண்ணிக்கை 231 ஆக குறைவடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

தட்டுப்பாடு நிலவும் 38 வகையான மருந்துகள் அடுத்த இரு வாரங்களுக்குள் நாட்டிற்கு கிடைக்கும் என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், வைத்தியசாலைகளில் தற்போது 78 வகையான மருந்து



களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என சுகாதார அமைச்சு கூறியுள்ளது.




# உயர்தரப் பரீட்சை முடிவு 10 இற்கு முன்

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் செப்டம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை ஓகஸ்ட் மாதம் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் முன்னர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை திகதிகளை கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது.

அதன்படி, இந்தப் பரீட்சை நவம்பர் 27 முதல் டிசம்பர் 21 வரை நடைபெறவுள்ளது.

# உதயங்க வெளிநாடு செல்ல அனுமதி தந்தது நீதிமன்றம்

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும் மஹிந்த ராஜபக்ஷவின் உறவினருமான உதயங்க வீரதுங்கவிற்கு வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் மிக் விமான கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று உதயங்க வீரதுங்க மன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கை விமானப் படைக்கு உக்ரைனில் இருந்து மிக் விமானங்களைக் கொள்வனவு செய்த போது, முறையற்ற வகையில் தலையீடு செய்து, கோடிக்கணக்கான பணத்தை மோசடி செய்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் உதயங்க வீரதுங்க மீது சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






25ம் திகதி இலங்கைக்கு வரும்

# சொப்பன சுந்தரி

## குஷியாகக் காத்திருக்கும் இளைஞர்கள்

கரகாட்டக்காரன் காலம் முதலாய் அனேகமானோரால் தேடப்பட்டுக் கொண்டிருக்கும் ‘சொப்பன சுந்தரி’ யை மாதவனும் அவரது சினிமா நண்பர்களும் சுமார் ஆறு வருடங்களாக மறைத்து வைத்திருந்திருக்கிறார்கள். இதற்கு மேலும் ஒளித்து வைத்திருப்பது நல்லதல்ல என்று நினைத்தவர்கள், எதிர் வரும் ஓகஸ்ட் 25ஆம் திகதி ‘சொப்பன சுந்தரி’யை ரிலீஸ் செய்யப் போவதாக அறிவித்ததில் இருந்து இளைஞர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு உருவாகி யுள்ளது.

**யார் இந்தக் குழுவினர்? ஏன் இவர்கள் ஆறு வருடங்களாகச் ‘சொப்பன சுந்தரி’யை மறைத்து வைத்திருந்தார்கள்?**

கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு முன்னிருந்தே பல குறும்படங்கள் மூலமாக இலங்கைத் திரைத் துறையினரின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்தவர் இயக்குனர் மாதவன் மகேஸ்வரன். ‘அப்பால்’, ‘என்னாச்சு?’ போன்ற குறும்படங்கள் மூலம் நன்கு அறியப்பட்ட மாதவன், வெவ்வேறு விருது விழாக் களில் பல விருதுகளைத் தனது குறும்படங்கள் மூலம் வென்றுள்ளார். இந்த இளம் இயக்குனர் தன் சினிமா நண்பர்களின் கூட்டணியில் இயக்கியி ருக்கும் முதலாவது முழுநீளத் திரைப்படமே ‘சொப்பன சுந்தரி’.

2017ம் ஆண்டில் படமாக்கப்பட்டு, சுமார் ஆறு வருடங்களாக பின்களத் தயாரிப்புப் பணி களில் இருந்த ‘சொப்பன சுந்தரி’ பல சவால் களைத் தாண்டி இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வந்து ரசிகர்களைக் குஷிப்படுத்தப் போகிறது.

இலங்கையில் தமிழில் உருவாக்கப்படும் முழுநீளத் திரைப்படங்கள் பல இப்போது வெளி வந்த வண்ணம் இருக்கின்ற இந்த சூழலில் ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நோக்கத்தோடு தயாரிக்கப் பட்டிருக்கும் ‘சொப்பன சுந்தரி’யும் திரைக்கு வருவது, இலங்கையின் தமிழ் சினிமாத்துறை மும்முரமாக இயங்கத் தொடங்கி விட்டது என்பதற்கான அடையாளமே!.


மாதவன் ஜோயல்

மாதவனின் ஆஸ்தான கதாசிரியரும் நடிகருமாகிய ஜோயல், ‘சொப்பன சுந்தரி’க்கான கதை, திரைக்கதையை எழுதி, ஒரு பிரதான கதாபாத்திரத்திலும் நடித்திருக்கின்றார். கொழும்பு நகரைக் கதைக்களமாக கொண்டு உருவாகி யிருக்கும் இத்திரைப்படத்தில், இலங்கையின் புகழ் பூத்த கதாநாயகி நிரஞ்சனி சண்முகராஜா ‘சுந்தரி’ கதாபாத்திரத்திலும், அவருடன் இணைந்து பேர்ழிஜா, கஜானன், நரேஷ், தனுஷ் செல்வ நாதன், வருண் துஷ்யந்தன், ரவி, ஜெனோஷன் ஆகியோரும் முக்கிய பாத்திரங்களில் நடித்திரு க்கிறார்கள். இயக்குனர் மாதவனும் ஓர் பிரதான பாத்திரமேற்று நடித்திருக்கிறார்.

ஒரு பெரும் சிக்கலில் சிக்கிக் கொள்ளும் மூன்று நண்பர்களும், அவர்களுக்கு விளையும் வில்லங்கங்களும் என்று விறுவிறுப்பான இரண் டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர் திரப்படமாக ‘சொப்பன சுந்தரி’ தயாராகி இருக்கிறது.

எல் எக்ஸ்ரீமோ, என்னாச்சு? என்று குறும்படங்கள் மூலம் தங்களின் ஒத்திகைகளைப் பார்த்து வைத்திருந்த மாதவனும் நண்பர்களும் அடுத்து ஒரு முழுநீளத் திரைப்படத்தை எடுக்கலாம் என்று 2017ம் ஆண்டு முடிவு செய்தார்கள். அந்த முடிவின் விளைவாக காதல், கொமெடி, பாடல்கள், ஆக்ஷன், ட்விஸ்ட் என முற்றுமுழுதான கொமெர்ஷல் பாணியில் இந்த ‘சொப்பன சுந்தரி’யை உருவாக்கியிருக்கிறார்கள்.




**சொப்பன சுந்தரி திரையிடப்படும் திரையரங்கு விபரங்கள் இதோ:**

SAVOY 3D - WELLAWATE
CONCORD - DEHIWALA
REGAL - DEMATAGODA
PVR - COLOMBO (FROM SEPT 01)
REGAL - JAFFNA
NELSON - TRINCOMALEE
GK CINEMAX - KALMUNAI
AMUTHA CINEMA - VAVUNIYA

## இரண்டரை மணிநேர முழுநீள நகைச்சுவைத் திரில்லர்

கிட்டத்தட்ட ஆறு மாதங்களாகத் தயாரிப் பாளர்களின் முதலீட்டிற்காக காத்திருந்த ‘சொப்பன சுந்தரி’, பின்னர் மாதவன், கஜானன் மற்றும் ஜோயலின் சொந்தத் தயாரிப்பில் 2017ம் ஆண்டின் பிற்பகுதியில் படமாக்கப்பட்டது. சமல் விக்ரமசிங்க வின் ஒளிப்பதிவிலும், இயக்குனர் மாதவனின் படத் தொகுப்பிலும் உருவாகி இருக்கும் காட்சிகளுக்கு இசையமைத்திருக்கிறார் பிரபல இசையமைப்பாளர் ஜீவானந்தன் ராம். ஜீவாவின் மெட்டுகளுக்கு வருண் துஷ்யந்தன், ராகுல் ராஜ் மற்றும் சங்கர் வரிகள் எழுதியுள்ளனர்.


சமல் விக்ரமசிங்க

இத்திரைப்படத்தின் படப்பிடிப்பிற்குப் பின்ன ரானதொழில்நுட்பப்பணிகளையும்செய்துகொண்டு, அதே கலைஞர்களின் கூட்டணியில், 2020ஆம் ஆண்டில் **‘SUNDAY’** எனும் இணையத் தொடரையும் Dialog நிறுவனத்தின் VIU செயலிக்காக மாதவன் இயக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத் தொடரில் பேர்ழிஜா முதன்மைக் கதாபாத்திரத்தி லும், இலங்கை சினிமாத் துறையில் பலரது அன்பையும் வென்ற கலைஞன் அமரர் தர்ஷன் தர்மராஜ் அவர்கள் ஒரு பிரதான பாத்திரத்திலும் நடித்திருந்தனர்.

இலங்கையில் இன்னும் ஒரு முற்று முழுதான தொழிற்துறையாக மாற்றம் பெறாத தமிழ் திரைப்படத் துறையில் ஒரு முழுநீளத் திரைப் படைத்தைத் தயாரித்து வெளியிடுவது என்பது, அதுவும் தயாரிப்பாளர்கள் யாருமே இல்லாமல் இம்மாபெரும் இலக்கை ஆறு வருடங்களாகப் போராடி அடைவது என்பது உண்மையிலேயே ஒரு உன்னதமான சாதனைதான். இக்கூற்றை வழி மொழிவதைப்போல அமைந்திருக்கிறது, ஜூலை மாத ஆரம்பத்தில் இணையத்தில் வெளியான ‘சொப்பன சுந்தரி’ ட்ரெய்லர் இளைஞர்கள் மத்தியில் பெற்று வரும் அமோகமான வரவேற்பு.


சொப்பன சுந்தரி படக் குழுவில் சிலர்

ஒரு நண்பர் பட்டாளத்தின் உழைப்பிலும், பெரும் பொருட்செலவிலும் உருவாகி, ஆறு வருட விடாமுயற்சியால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25ம் திகதி திரைக்கு வரும் ‘சொப்பன சுந்தரி’, பார்ப்பவர்களை சிரித்து மகிழ வைக்கப் போவதும், இளைஞர்களால் மகிழ்ந்து கொண்டாடப்படப் போவது நிச்சயம்.

# ராஜபக்ஷக்கள் மீளவும் அதிகாரத்துக்கு வரலாம்

## ஜனநாயகத்தில் எதுவும் நடக்கலாம் மிலிந்த மொராகொட கூறுகின்றார்



ராஜபக்ஷக்களின் மீள்வருகையை நிராகரிக்க முடியாது என இந்தியா விற்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

2022 இல் பொருளாதார நெருக் கடியை தொடர்ந்து பாரிய ஆர்ப்பாட் டங்கள் காரணமாக பதவியிலிருந்து அகற்றப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் குறித்து மக்கள் மத்தி யில் கடும் அதிருப்தி காணப்படுகின்ற போதிலும், 2024 ஜனதிபதி தேர்தலில் ராஜ பக்ஷக்களுக்குப் போட்டியிடுவதற் கான அனுமதி வழங்கப்படும் என மிலிந்த மொராகொட தெரிவித்துள் ளார்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. தற்போதைய அரசாங்கத்தில் ராஜபக் ஷக்களின் பிரதிநிதித்துவம் உள்ளது. அரசாங்கத்தில் ராஜபக்ஷக்களின் குடும்பத்தவர்கள் பலர் உள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஒரு ஜனநாயக நாடு. மக்க ளின் தீர்ப்பே இறுதியானது எனக் குறிப் பிட்டுள்ள மிலிந்த மொரகொட தனிப் பட்ட நபர்களை பூதாகாரமாக்குவது தற் போது விரும்பி முன்னெடுக்கப்படுகின்ற விடயம். ஆனால் இது கேள்விக்கான பதில் இல்லை எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இறுதியில் இது குறித்து மக்களே தீர் மானிக்கவேண்டும். இலங்கை அவ்வாறே இவ்வளவு நாள்களும் செயற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை வகித்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக இலங்கை முன்னொருபோதும் இல்லாத வன்முறை களை சந்தித்தது.

73 வயது ஜனாதிபதி 2022 ஜூலை இல் நாட்டை விட்டு தப்பியோடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

மாலைதீவு, சிங்கப்பூர்,தாய்லாந்து ஆகியநாடுகளில் தலைமறைவாக வாழ்ந்த பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ செப்டம்பரில் நாடு திரும்பினார். அதேகா லப் பகுதியில் விக்கிரமசிங்க இலங்கை ஜனாதிபதியாக்கப்பட்டார்.

அடுத்தவருடம் நாங்கள் தேர்தல்களை எதிர்கொள்வோம். அடுத்தவருடம் ஓகஸ்ட்டிற்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவேண்டும். தற்போது பொருளாதாரத்தைப் பலப்படுத்துவது குறித்தே கவனம் செலுத்தப்படுகின்றது எனவும் மிலிந்த மொராகொட தெரிவித் துள்ளார்.

13ஆவது திருத்தம் உட்பட ஜனாதிப தியின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் நாடா ளுமன்றம் அங்கீகாரத்தை வழங்கு கின்றது எனவும் குறிப்பிட்டுள்ள மிலிந்த மொராகொட ஜனநாயகத்தில் தேர்தல்கள் இடம்பெற வேஎண்டும். அடுத்த வருடத் தின் இரண்டாவது காலப்பகுதியில் தேர் தல்கள் இடம்பெறும் என எதிர்பார்க் கப்படுகின்றது எனவும் தெரிவித்துள் ளார்.

ஜனநாயகத்தில் எதனையும் நிச்சய மாக தெரிவிக்க முடியாது. ஆனால் இதுவரை இவ்வாறே தீர்மானிக்கப் பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

இலங்கை அதன் மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டது மே 2022 இல். ஆர்ப்பாட் டங்கள் கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பரவலாக, தீவிரமாகக் காணப்பட்டன. அரசாங் கத்தின் பேரழிவுப் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றுமாறு வேண்டு கோள்கள் விடுக்கப்பட்டன. ஆர்ப்பாட்டக்கா ரர்கள் அம்பாந்தோட்டையில் உள்ள ராஜபக்ஷக்களின் மூதாதையர்களின் வீடுகளைக் கூடத் தீயிட்டுக் கொளுத் தினர். ஏனைய அமைச்சர்களின் வீடு கள், சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட் டன.

இலங்கை என்பது சிறிய நாடு. இந்தத் துயரங்கள் அவ்வப்போது வெளிப் பட்டுக்கொண்டேயிருக்கும். 2022 இல் இடம்பெற்றது அவ்வாறான ஒன்று எனவும் மிலிந்தமொராகொட தெரிவித்துள் ளார்.

எங்கள் ஜனநாயகம் இதனை உள்வாங் கக் கூடியதாக இருக்க வேண்டும். இதுவே சவால். ஒவ்வொருவரும் தாங் கள் செய்வது, சொல்வது சரியென நினைக்கின்றனர். ஒருவரின் வீடுகளை எரிப்பதோஅல்லது கொலை செய்வதோ சரியான விடயமில்லை.

தலைவர்களுக்கு இதனை எவ்வாறு கையாள்வது என்பது தெரிந்தி ருக்க வேண்டும். இலங்கை ஒரு சிறிய நாடுஇவ்வாறான விடயங்களுக்கு தீர்வை காணமுடியும் என நாங்கள் நினைக்ககூடும்.ஆனால் தீர்வு இதுவரை எங்களிடமிருந்து தவறியுள்ளது. நாங்கள் மிக மோசமான வன்முறை வரலாற்றைக் கொண்டுள்ளோம். 75 வருடங்களாக நாங்கள் யுத்தத்தில் ஈடுபட்டோம். கிளர்ச் சிகளை எதிர்கொண்டோம். ஆகவே நாங்கள் தீர்வுகளைக் காணவேண்டும். ஆனால் அவை புரட்சிகளின் மூலம் ஏற்படும் தீர்வுகள் இல்லை. புரட்சிகளை நாங்கள் ஆதரிக்கவில்லை. – எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் நேற்று சர்வதேச கூட்டுறவு விழா





யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபையின் 101 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை கொண்டாடும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்ட பத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம விருந்தின ராக கலந்து கொண்டார்.

போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதன் போது வடக்கு மாகாண ஆளுநரால் பரிசி ல்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன.

இந்நிகழ்வில் கூட்டுறவு திணைக் கள உத்தியோகத்தர்கள், கூட்டுற வாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு சென்றவர் கடலில் மூழ்கி மரணம்

## நிலாவெளியில் சம்பவம்

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை, நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிறந்தநாள் கொண்டாடுவதற்குச் சென்ற நபரொருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை, திருஞானசம்பந்தர் வீதியில் வசித்து வந்த கனகரத்தினம் சிவக்குமார் (53வயது) என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு சாம்பல்தீவு கடற்கரைக்கு ஆறு பேர் கொண்ட குழு சென்றதாகவும் அதில் மூவர் குளித்துக் கொண்டிருந்த போது ஒருவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டார் எனவும் இதனையடுத்து பொலிஸார் மற்றும் இளைஞர்களின் உதவியுடன்அந்த நபரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர் எனவும் கூறப்பட்டது.

பிரேத பரிசோதனை நேற்றே இடம் பெறவுள்ளதாகவும், மரணம் தொடர்பிலான விசாரணைகளை தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# துணை மருத்துவ சேவையாளர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம்

துணை மருத்துவ சேவையின் ஐந்து தொழிற்சங்கங்களுடன் இணைந்த தொழிற்சங்கங்கள் இன்று 24 மணி நேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம, இத்தொழிற்சங்க போராட்டம் இன்று காலை 8.00 மணி முதல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி வரை நடைமுறையில் இருக்கும் என்றார்.

இதன்படி, 07 கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி கதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்கள், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானிகள், மருந்தாளுனர்கள், பிசியோதெரபிஸ்ட்கள் மற்றும் தொழில்சார் சிகிச்சை நிபுணர்கள் என ஐந்து தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த ஒரு நாள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

மேலும், இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக எக்ஸ்ரே, சி.டி. ஸ்கான் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கான் போன்ற மருத்துவ ஸ்கேன் மற்றும் பிற ஆய்வக சேவைகள் மற்றும் மருந்து விநியோகம் தடைபடும் என பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தரப்பால் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவரின் 33 படகுகளுக்கு நிவாரணம்

## தமிழ்நாடு மாநில அரசு உத்தரவு




இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு, தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளுக்கு நிவாரணம் வழங்கத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கிணங்க இலங்கைக் கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தமிழக மீனவர்களின் 33 படகுகளுக்கு நிவாரணம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன் பிரகாரம் 33 படகுகளுக்கும் இந்தியப் பணத்தில் ஒரு கோடி 23 லட்சம் ரூபா நிவாரணம் வழங்கப்படவுள்ளது

# சந்திரயான 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது!



நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ அனுப்பியுள்ள சந்திரயான்-3 விண் கலத்தின் விக்ரம் லேண்டர் நேற்று வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது.

40 நாட்கள் பயணத்தின் பின்னர் நேற்று மாலை 6.04 மணிக்கு நிலவின் தரைப் பரப்பில் விக்ரம் லேண்டர் தரை யிறங்கியது.


சந்திரயான்-3 விண்கலத்திலிருந்து பிரிந்த விக்ரம் லேண்டரின் சுற்றுவட்டப் பாதையின் உயரம் படிப்படியாக குறைக் கப்பட்டது.

இதனையடுத்து, தரையிறங்குவதற் கான கட்டளை பிறப்பிக்கப்பட்டதை அடுத்து விக்ரம் லேண்டர் மாலை 6.04 க்கு வெற்றிகரமாக நிலவில் தரை யிறங்கியது.

சந்திராயன்-3 தனது நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தமையின் ஊடாக, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவிற்கு பின்னர், நிலவு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு சாத னைகளைப் படைத்த உலகின் நான் காவது நாடாக இந்தியா பதிவாகியுள்ளது.

நிலவின் தென் துருவத்தைத் தொட்ட முதல் நாடு என்ற அழியாத சாதனை யையும் இந்தியா படைத்துள்ளது.

இது தொடர்பான காட்சிகள் அனைத்தும் பொதுமக்களுக்காக இஸ்ரோவின் உத்தியோகபூர்வ சமூக வலைத்தளத்தில் நேரடியாக ஒளிபரப்பப் பட்டமை சிறப்பம்சமாகும்.



நேற்றைய வெற்றி தொடர்பில் இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முதல் நிலவு திட்டமான சந்திரயான் -1 கடந்த 2008 இல் 386 கோடி இந்திய ரூபா செலவில் நிறைவேற்றப்பட்டது. சந்திரயான் - 2 திட்டத்திற்கு 978 கோடி இந்திய ரூபா செலவிடப்பட்டது. சந்திரயான்-3 திட்டத்திற்கான செலவு 615 கோடி இந்திய ரூபா.

சந்திரயான் -3 விண்கலம் கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி நண்பகல் 2:35 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது.

இதன் பின்னர், சந்திரயான்-3 விண்கலத்தின் பாதை உயரத்தை உயர்த்தும் நடவடிக்கை 5 முறை மேற் கொள்ளப்பட்டது.

புவியின் சுற்றுவட்டப் பாதையில் சுற்றிவந்த சந்திரயான்-3 விண்கலம் திட்டமிட்டப்படி ஒகஸ்ட் 1 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 1 மணி இடையிலான நேரத்தில் நிலவை நோக்கிய பயணத்தை தொடங்கியது.

ஒகஸ்ட் 17 ஆம் திகதி சந்திரயான்-3 உந்து சக்தி கலனில் இருந்து விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக பிரிந்தது. ஒகஸ்ட் 23 ஆம் திகதி விக்ரம் லேண்டர் நிலவின் நிலப்பரப்பில் தரையிறங்கியது

நிலவின் தென் துருவப் பகுதியில் 70 டிகிரி அட்சரேகையில் லேண்டர் தரையிறங்கி, அங்கு சந்திரயான்-3 தனது ஆய்வுகளைச் செய்யவுள்ளது.

நிலவில் வெப்பம் அதிகமாக இருக்கும் மண் பகுதியில் நடக்கும் மாற்றங்களை அறிவது, அங்குள்ள பொருட்கள் என்ன நிலையில் உள்ளன, அங்குள்ள வெப்பம் தாங்கும் தன்மை கொண்டதா போன்ற பல தரவுகளை சந்திரயான்-3 கண்டறியவுள்ளது.

தகவல்களை கண்டறிவது ஆகிய பணிகள் மேற்கொள்ளபடவுள்ளன. இதேபோல், பூமியைப் போலவே நிலா விலும் நில அதிர்வுகள் உள்ளனவா, இப்போது இல்லையென்றால் முன்பு இருந்தனவா என்பன போன்ற தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன.

விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங் கியதும், அதன் உள்ளே இருக்கும் ரோவர் எனப்படும் ஊர்திக்கலன் வெளியே வரும். இந்த ஊர்திக்கலன் நிலவின் மண் மாதிரிகளை ஆய்வு செய்து, தரைப்பரப்பின் தன்மை என்ன, வெப்பம் எந்த அளவிற்கு உள்ளது, தண்ணீர் உள்ளதா என்பன போன்ற தகவல்களை சேகரித்து அனுப்பும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 33 படகுகளுக்கு நிவாரணம் வழங்க தமிழக அரசு உத்தரவு

இலங்கை கடற்படையினரால் பறி முதல் செய்யப்பட்டு, தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளுக்கு நிவாரணம் வழங்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கான அரசாணை வெளியிடப்பட் டுள்ளது. இதற்கிணங்க, இலங்கை கடற்படை யால் பறிமுதல் செய்யப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தமிழக மீனவர்களின் 33 படகு களுக்கு நிவாரணம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# ரஷ்ய ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ச்சி செய்த வாக்னர் குழுத் தலைவர் விமான விபத்தில் பலி!





கடந்த ஜூன் மாதம் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு எதிராக சாத்தியமற்ற ஒரு சதிப்புரட்சிக்கு தலைமை தாங்கிய வாக்னர் கூலிப்படையின் தலைவரான எவ்ஜெனி பிரிகோஜின் விமான விபத் தொன்றில் கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் டாஸ் செய்தி நிறுவனத்தை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

விமானத்தில் பயணித்தவர்களின் பட்டியலில் எவ்ஜெனி ரிகோஜினும் இருந் ததாக ரஷ்ய சிவில் விமான போக்குவரத்து ஆணையம் கூறியதாக அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொஸ்கோவில் இருந்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிற்கு சென்ற விமானம் விபத்துக்குள்ளானது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூன்று பணியாளர்கள் உட்பட விமானத்தில் இருந்த 10 பேரும் விபத்தில் உயிரிழந்துள்ளனர் என ரஷ்யாவின் அவசர அனர்த்த மேலாண்மை அமைச் சகம் கூறியுள்ளது என உள்நாட்டு செய்தித் சேவையான நோவோஸ்டி தெரிவித்துள்ளது.

மேலதிக விவரங்கள் எவற்றையும் பகிர்ந்து கொள்ளாமல், விமான பயணிகளில் யெவ்ஜெனி ப்ரிகோஜின் என்ற பெயருடன் ஒரு நபர் இருப்பதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த ஜெட் விமானம் வாக்னர் தனியார் இராணுவ நிறுவனத்தின் நிறுவனர் பிரிகோஜினுக்கு சொந்தமானது என்று உறுதிப்படுத்தப்படாத ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவின் பொது விமான சேவைகள் ஆணையகமான ரோசாவியாட்சியாவின் தகவல்களின் படி, ப்ரிகோஜின் பயணிகள் பட்டியலில் இருந்ததாக சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

ஆனால் அவர் விமானத்தில் ஏறினாரா என்பது உடனடியாகத் தெரிய வில்லை என்று சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

## ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் ஆளில்லா விமானம் தாக்குதல்!



ரஷ்யாவின் தலைநகரான மொஸ் கோவின் மத்திய பகுதியில் உள்ள கட்டிடத்தை ஆளில்லா விமானம் தாக்குதல் மேற்கொண்டுள்ளது என மொஸ்கோ நகர முதல்வர் தெரிவித் துள்ளார்.

அத்துடன், மொஸ்கோவின் மொசைஸ்க் மற்றும் கிம்கி பகுதிகளில் இரண்டு ஆளில்லா விமானங்கள் ஊடாக உக்ரைன் பாதுகாப்பு படையினர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் குறித்த தாக்குதலால் ஏற்பட்ட உயிர் சேதங்கள் தொடர்பில், இதுவரை எவ்வித தகவல்களும் வெளி யிடப்படவில்லை.

இதன் காரணமாக, நேற்று அதிகாலை ரஷ்யாவின் விமான நிலையங்களுக்கு செல்லும் மற்றும் அங்கிருந்து புறப்படும் சகல விமானங்களும் இடை நிறுத்தப் பட்டுள்ளன.

மொஸ்கோ நகர வளாகத்தில் கட்டுமானத்தில் இருந்த கட்டிடத்தை தாக்கிய ஆளில்லா விமானம் மின்னணு போர் முறைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டது என ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது.

அது கட்டுப்பாட்டை இழந்து கட்ட டத்தின் மீது மோதியுள்ளது என சர்வ தேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## வடகொரியாவில் கடல் சீற்றம்!

வடகொரியாவில் கடல் சீற்றம் காரணமாக நிலப்பகுதிகளில் கடல் நீர் புகுந்ததால் ஏற்பட்ட வெள்ளத்தில் சுமார் 560 ஹெக்டேயர் பயிர் நிலங்கள் அழிவடைந்துள்ளன என தெரிவிக் கப்பட்டுள்ளது

இந்த அழிவுகளை பார்வையிட்ட ஜனாதிபதி கிம், நாட்டின் பிரதமர் மற்றும் அதிகாரிகளின் பொறுப்பற்ற செயல் என சாடியுள்ளதோடு பொருளாதாரத்தை வீணடித்துவிட்டனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## சூடானில் தொடரும் மோதல்!

சூடானில் இடம்பெற்று வரும் உள்நாட்டு போர் காரணமாக, 500 குழந்தைகள் பட்டினியால் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகி உள்ளது.

கிழக்கு ஆப்ரிக்க நாடான சூடானில் இராணுவத்துக்கும், துணை இராணுவப் படைக்கும் இடையே மோதல் இடம் பெற்றுவரும் நிலையில் நாடு முழுதும் பதற்றம் நீடித்து வருகிறமை குறிப்பிடத் தக்கது.



# நாட்டில் உள்ள தண்ணீர்ப் பிரச்சினை
# தேசியப் பிரச்சினையாகவே உள்ளது
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

நாடளாவிய ரீதியில் பல மாவட்டங்களில் மக்கள் குடிதண்ணீர் தட்டுப்பாடு, விவசாயம் மற்றும் மின்சார உற்பத்திக்கு போதிய நீர் இன்மை, வன விலங்குகளுக்கு குடி தண்ணீர் தட்டுப்பாடு, வறட்சியால் புல்வெளிகள் வறண்டு போவதனால் கால்நடை வளர்ப்பு பாதிப்பு என பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வறட்சியான காலநிலையால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இன்றைய நாடாளுமன்ற அமர்வில் நிலையியல் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விகளை எழுப்பிய போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

தண்ணீர் இன்மையால் பயிர் சேதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பயிர் இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்படுவதைத் தாண்டி ஒரு திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

இதற்குப் பணம் இல்லை என்றால், 2020 ஒக்ரோபர் 14 முதல் 2021 பெப்ரவரி 20 வரை சீனி இறக்குமதிக்கான விசேட பண்ட வரியை 50 ரூபாவில் இருந்து 25 சதமாக குறைக்கப்பட்டது. அந்த நேரத்தில், 400,000 மெட்ரிக் டொன் சீனி இறக்குமதி செய்யப்பட்டது. இதனால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு 15.9 பில்லியன் ரூபா . இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு நாட்டுக்கு இழந்த பணத்தை மீட்டு வறட்சியான காலநிலையால் பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் உள்ள சில அமைச்சர்களுக்குத் தண்ணீர் முன்னுரிமை குறித்துச் சரியான தெளிவு இல்லை. எனவே இது தொடர்பில் நாடாளு மன்றத்துக்கு அறிவுறுத்த வேண்டும்.

அத்துடன் விவசாயிகளின் நெல்லுக்கு உத்தரவாத விலை வழங்குவது தொடர்பில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. ஒரு கிலோவுக்கு 80 முதல் 85 ரூபா வரையான தொகை வழங்கப்படுகிறது. செலவை ஈடுகட்டுவதற்கு இது போதுமானதாக இல்லை.–என்றார்.



# நெல் உலரவைக்கும் களமாக வீதிகள்!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச வீதிகள் எல்லாம் தற்பொழுது நெல் உலர வைக்கும் களமாக மாறி வருகின்றன.

அறுவடையின் பின்னர் நெல்லை உலர வைத்து சேமிக்கின்ற பழக்கம் விவசாயிகளிடம் உள்ளது .

கடந்த காலங்களில் வயல்களிலும் மைதானங்களிலும் இந்த உலர வைக்கும் செயல்முறை மேற்கொண்டு வந்தார்கள்.

ஆனால் அண்மைக் காலமாகப் பிரதான வீதிகளில் உலர வைக்கும் செயன்முறைதொடர்கிறது.

இதனால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுகின்ற போதும் விவசாயிகளது நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுமாறு பயணிகளிடம் விவசாயிகள் கேட்டுள்ளனர்.





# ஆபத்தான நிலையில் பாலம்: நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட விபுலானந்த தேசிய பாடசாலைக்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ள பிரதான பாலம் இடிந்து விழும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

இந்தப் பாலத்தை தினசரி ஆயிரத்துக்கும் அதிகமானோர் பயன்படுத்தி வருகின்றனர்.

காரைதீவு விபுலானந்த தேசிய பாடசாலைக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயணிக்கும் இந்த வீதியில் கனகரெட்ணம் விளையாட்டு மைதானம், விதாதா வளநிலையம், வீரபத்திர சுவாமி ஆலையம் , ஸ்ரீசித்தானைக்குட்டி ஆலயம் என்பன அமைந்துள்ளன.

காரைதீவு தோணாவுக்கு மேலான அமையப் பெற்றுள்ள இந்தப் பாலம் சுமார் 50 வருடங்கள் பழைமை வாய்ந்தது.

பாலத்துக்குள் போடப்பட்டுள்ள இரும்பு கம்பிகள் துருப்பிடித்து வெளியே தெரிகின்றன. பாலத்தினூடாக வாகனங்கள் செல்லும் போது ஒருவிதமான அதிர்வும் ஏற்பட்டு எந்த நேரத்திலும் இடிந்து விழக் கூடிய நிலைமையில் உள்ளது.

அண்மையில் இந்த வீதி கார்பட் வீதியாகப் புனரமைப்புச் செய்யப்பட்ட போது பிரதேசவாசிகளால் சம்பந்தப்பட்ட பொறியியலாளரிடம் இந்தப் பாலம் சம்பந்தமாக எடுத்துக் கூறப்பட்டது. எனினும் எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனதம் தெரிவிக்கின்றனர்.

எனவே தற்போது பழுதடைந்த பாலத்தை முற்றாக அகற்றி புதிய பாலமொன்றை அமைத்து தருமாறு பொது மக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# நீரோடைகளில் வீசப்படும் கழிவுகளால் சுகாதாரக் கேடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் இடுபட்டுவரும் விவசாயிகள் வயல் நிலங்களில் பயன்படுத்தும் களை நாசினிகள் மற்றும் கிருமி நாசினிகள் போன்ற விவசாயன இரசாயனப் பொருள்களை பாவித்த பின்னர் வெற்று போத்தல்களை அருகில் உள்ள ஆறுகளிலும் நீரோடைகளிலும் வீசிச் செல்கின்றனர். இதனால் பலவிதமான சூழல் சீர்கேடுகள் ஏற்படுகின்றன என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நாசினிகள் தெளிகருவிகளையும் வயல் நிலத்துக்கு அருகிலுள்ள ஆறுகள், நீரோடைகள் மற்றும் வாய்க்கால்களில் கழுவுகின்றனர் என்றும் இதிலிருந்து வெளியேறும் பாரதூரமான நச்சுப் பதார்த்தங்கள் நீருடன் கலப்பதால் நீர் வாழ் உயிரினங்கள் இறக்கின்றன எனவும் இந்த நீரை பயன்படுத்தும் பொது மக்களும் பாதிப்பு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நச்சு நீர் கலந்துள்ள நீரில் வாழும் மீன்களை உணவாக உட்கொள்ளும் போது அது படிப்படியாக மனித உடலில் பலவிதமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சூழலும் இதனால் மாசடையும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட விவசாய அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குமாறு பொது மக்கள் கேட்டுள்ளனர்.

# மாகாணப் போட்டிக்குத் தெரிவான இரண்டு மாணவிகளுக்குப் பாராட்டு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சம்மாந்துறை, நெய்னாகாடு அல் அக்ஸா வித்தியாலயத்தில் இருந்து மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவான மாணவிகளுக்கு பாராட்டுத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் விளையாட்டு உபகரணங்களும்வழங்கப்பட்டுள்ளன.

மாணவி பாத்திமா றினா என்ற மாணவி 12 வயதுக்குட்பட்ட பெண்களுக் கான 60 மீற்றர் மற்றும் 100 மீற்றர் ஓட்ட போட்டிகளில் இரண்டாம் இடத்தையும்-




மாணவி யூ.எல்.எப். சீபா 18 வயதுக்-குட்பட்ட பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்ட போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று கிழக்கு மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட இரு மாணவி களுக்கும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், முன்னாள் சம் மாந்துறை பிரதேச சபை உறுப்பினரு மான ஐ.எல்.எம் மாஹிர் தனது பாராட்டுக் களையும், வாழ்த்துக்களையும் தெரிவித் தார். அத்துடன் அவர்களுக்கான விளை யாட்டு உபகரணங்களையும் வழங்கி வைத்தார் . இந்த நிகழ்வு பாடசாலை அதி பர் ஏ.பி.ஹிபதுல்லா தலைமையில் நடை பெற்றது.


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



உலக சமுதாய சேவா சங்கம் - கொழும்பு மண்டலம்,
இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை

கொழும்பு அறிவுத்திருக்கோயில்
SKY
யோகா நிலையம்
திறப்பு விழா

27.08.2023
ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி
அறிவுத் திருக்கதவு திறத்தல்

திறந்து வைப்பவர்:
உலக சமுதாய சேவா சங்கத் தலைவர்,
அருள்நிதி பத்மஸ்ரீ SKM மயிலானந்தன் அவர்கள்

திறப்புவிழா நிகழ்ச்சிகள்
இடம்: இராமகிருஷ்ண மிஷன் பிரதான மண்டபம்
காலை அமர்வு 10.30 - 1.00 மணி வரை
மாலை அமர்வு 4.30 - 8.00 மணி வரை

சிறப்புரை
திருமதி பாரதி பாஸ்கர்
பட்டிமன்றப் பேச்சாளர், சென்னை, தமிழ்நாடு

இல. 53 1/A, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06, இலங்கை.

# காணி, நிர்வாகம், நிதி, பொலிஸ் அதிகாரம் மூவின எம்.பிகளும் கலந்துரையாட வேண்டும்

## ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த முன்மொழிவில் முஷாரப் எம்.பி. வேண்டுகோள்

(எஸ். மௌலானா)

கிழக்கு மாகாணத்தில் காணி, நிர்வாகம், நிதி மற்றும் பொலிஸ் அதிகாரம் தொடர்பாக கலந்துரையாடித் தீர்வுகளை எட்டுவதற்காக இம்மாகாணத்தை சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே வட்டமேசை மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு, அர்த்தமுள்ள கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும் என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்துள்ளார்.

இனங்களிடையே பரஸ்பரம் புரிந்துணர்வு, நம்பிக்கை ஏற்படாத வரை 13 ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுழ்படுத்துவது சாத்தியமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்துள்ள அரசமைப்பின் 13 ஆவது திருத்த சட்டம் தொடர்பான தனது முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையிலேயே அவர் இவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.



அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அதிகாரப் பகிர்வை முன்னிறுத்தியே அரசியலமைப்பில் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் அனைத்து சமூகத்தினரும் விட்டுக் கொடுப்புகளுடன் அர்ப்பணிப்புகளை செய்வதற்கு தயாராக வேண்டும்.

இன சமத்துவமும் தனிநபர் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாகாண அரச நிர்வாக செயற்பாடுகளில் அனைத்து சமூகங்களதும் வகிபாகங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

இனங்களிடையே புரிந்துணர்வின்மை, சந்தேகம், அவநம்பிக்கை மேலோங்கியிருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அனைத்து மத, சமூக குழுக்களிடையேயும் பரஸ்பரம் புரிந்துணர்வு, நம்பிக்கை மற்றும் ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்த சட்டமானது, அர்த்தமுள்ள வகையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமாயின் முதலில் இவ்வாறான அடிப்படை விடயங்கள் நிறைவு செய்யப்படுவது அவசியமாகும். -என்றுள்ளது.



# நானாட்டான முத்துமாரியம்மன் ஆலய அன்னபூரணி திருவிழா

(மன்னார்)

மன்னார் நானாட்டான் ஸ்ரீ செல்வ முத்து மாரியம்மன் ஆலயத்தின் அன்னபூரணி திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

இதன் போது ஆலயத்தைச் சுற்றி பக்தர்களால் பொங்கல் பொங்கி அம்பிகைக்கான நேர்த்திக் கடன்கள் செய்யப்பட்டது.



# இன்றைய ராசி பலன்கள் - 24.08.2023

**மேஷம்**

குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகளுக்கான ஆயத்த ஏற்பாடுகளைச் செய்வீர்கள். தள்ளிப்போன திருமணப் பேச்சு வார்த்தையை திறமையாக முடிப்பீர்கள். வேலையிடங்களில் அன்பைக் காட்டி அனுகூலத்தைப் பெறுவீர்கள். வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்துவீர்கள். தொழில் துறையில் இருந்த போட்டிகளை விலக்குவீர்கள்.

கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால்ஆதாயமும் உண்டு. உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**ரிஷபம்**

பணியிடத்தில் உங்களுக்கு எதிரிகள் முளைப்பார்கள். கடுமையாக வேலை செய்தாலும் முதலாளிகளின் பாராட்டைப் பெறுவது கடினம். ஆன்லைன் வர்த்தகங்கள் ஆபத்தை உண்டாக்கும். சூதாட்டத்தின் பக்கம் தலை வைத்துப் படுக்காதீர்கள். வசீகரமான பேச்சால் வாடிக்கையாளர்களைக் கவருவீர்கள். எளிய முறையில் நடந்து வியாபாரத்தைப் பெருக்குவீர்கள்.

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பழைய சிக்கல்கள் தீரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**

வெளியூர் பயணங்களில் பெரிய லாபம் அடைய மாட்டீர்கள். தொழிலில் அதிக முதலீடு செய்ய தயங்குவீர்கள். அடுத்தவருடைய பேச்சை நம்பி அகலக் கால் வைக்காதீர்கள். கடுமையான முயற்சிக்குப் பின்பே அரசாங்க காரியங்களை முடிப்பீர்கள். வெளிநாட்டில் இருந்து வரவேண்டிய உதவி தாமதப்படுவதால் வீட்டு வேலையை ஒத்தி வைப்பீர்கள்.

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். நண்பர்கள் வழியில் உங்களுக்கு ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**

தொழில் படுமுன்னேற்றகரமான நிலையை காண்பீர்கள். பணவரவில் தாராளமான நிலையை அடைவீர்கள். உறவுகளில் இருந்த உரசல்களைச் சரி செய்வீர்கள். பிள்ளைகளின் கல்விக்காக பணத்தைச் சேமிப்பீர்கள். குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கிப் போடுவீர்கள். முழங்கால் வலிக்காக மருத்துவ பரிசோதனை செய்து கொள்வீர்கள்.

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**

கூட இருந்தே குழி பறிக்கும் நண்பர்களை அடையாளம் காண்பீர்கள். தொழிலுக்கு எதிராக தோன்றிய போட்டிகளைச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்த தேவையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். சிறு வியாபாரிகள் அதிகமான பலனைப் பெறுவீர்கள். அரச வேலைகள் அனுகூலமாக நடக்கும். கடன் சுமையை குறைப்பீர்கள்.

துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**

உங்கள் சொல்லுக்கு வீட்டில் மரியாதை அதிகரித்து சந்தோஷம் அடைவீர்கள். பொதுநல சேவையால் வெளி வட்டாரத்தில் செல்வாக்கை உயர்த்துவீர்கள். பதவி உயர்வுக்கான வேலைகளை செய்வீர்கள். தனியார் துறையில் சம்பள உயர்வு அடைவீர்கள். முதலாளிகளின் அணுக்கமான அன்பை பெறுவீர்கள். பங்கு பரிவர்த்தனை தொழிலில் ஏற்றம் காண்பீர்கள்.

கணவன் – மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்**

நல்லதையே செய்தாலும் கெட்ட பெயர் எடுப்பீர்கள். வேண்டிய நபருக்கு நீங்கள் உதவி செய்வீர்கள். ஆனால், அது வீட்டில் உள்ளவர்களுக்குப் பிடிக்காததால் இம்சைப்படுவீர்கள். கடன் பத்திரங்களில் படித்துப் பார்க்காமல் கையெழுத்து போடாதீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யாதீர்கள். நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் முடிவுக்கு வராமல் இழுபறியாக நிலையை காண்பீர்கள்.

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் கவரும்படி சலுகைகளை அறிவிப்பீர்கள்.

**விருச்சிகம்**

கொடுத்து வைத்த பணத்தைத் திருப்பிக் கேட்டால் விவகாரம் வந்து சேரும். கல்யாணம் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கச்சிதமாக பேசுங்கள். ஆடம்பரமாகச் செலவு செய்யாதீர்கள். தேவையில்லாமல் பண விரயத்தை ஏற்படுத்தாதீர்கள். வியாபாரம் மந்த நிலையிலேயே நடக்கும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து பணம் கிடைக்க தாமதமாகி சிரமத்தில் தவிப்பீர்கள்.

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். ஆடம்பர செலவுகளால் சேமிப்புகள் கரையும். உடல் நலத்தில் கவனம்

தேவை. வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.08.2023




தொட்டதெல்லாம் துலங்கி சந்தோஷத்தில் துள்ளுவீர்கள். விட்ட பணத்தை வியாபாரத்தில் மீட்டெடுப்பீர்கள். கூட்டாகத் தொழில் செய்ய ஒப்பந்தம் போடுவீர்கள். நில விற்பனையில் நல்ல லாபம் பார்ப்பீர்கள். தொழில்துறைகளை மிக முன்னேற்றமாக நடத்துவீர்கள். அரசு ஊழியர்கள் பணியிடத்தில் அனுகூலம் அடைவீர்கள்.

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பழைய கடன் பிரச்சினை கட்டுக்குள் வரும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். எண்ணங்கள் நிறைவேறும் நாள்.




தகவல் தொழில்நுட்பத் துறையில் திறமையை வெளிப்படுத்துவீர்கள். அரசு ஊழியர்கள் பதவி உயர்வும் இடமாற்றமும் அடைவீர்கள். புதிய வீடு கட்டுவதற்காக அடித்தளம் அமைப்பீர்கள். பிள்ளைகள் படிப்பில் மிகுந்த அக்கறை காட்டுவீர்கள். வியாபாரத்தை சிறப்பாக நடத்துவீர்கள். வீடு கட்டும் தொழிலில் பொறியியலாளர்கள் புதிய சாதனை படைப்பீர்கள்.

உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.




தந்தையின் ஆலோசனையால் புதிய தொழில் தொடங்குவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டை கலகலப்பாக்குவீர்கள். சுப காரியங்களுக்கான முன்னேற்பாடுகள் செய்வீர்கள். பிரிந்து போன உறவுகளை சேர்த்து வைக்க பெரும் முயற்சி செய்வீர்கள். நண்பர்களுக்கு தக்க சமயத்தில் உதவி செய்து பாராட்டுப் பெறுவீர்கள். ஊழியர்கள் அக்கறையுடன் வேலை செய்து உயர்வு அடைவீர்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.




அவசரமான காரியமாக இருந்தால் வெளியூர் செல்லலாம். இல்லையெனில் பயணங்களை ஒத்தி வைப்பது நல்லது. திமிராகப் பேசி வாக்குவாதம் செய்வதை தவிர்த்து விடுங்கள். குடும்பத்தில் கோபத்தை வெளிப்படுத்தாதீர்கள். பிள்ளைகளின் பேச்சை காது கொடுத்து கேளுங்கள். அலுவல் சுமையால் உடல் சோர்வு உண்டாகும். சந்திராஷ்டம நாள். கவனமாக நடந்து கொள்ளுங்கள்.

சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமைத் தேவைப்படும் நாள்.

